1971 டிசம்பர் 10]

(இ) ஆம் எனில், வருடா வருடம் விவசாயத் துறையில் பட்டம் பெறு கின்ற ஏறத்தாழ 250 (இருநூற்றி ஐம்பது) பேர்களுக்கு காலப்போக்கில் வேலை வாய்ப்பு அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம். இது பரிசிலனையில் இருந்துவருகிறது.

(இ) தற்போது, இம்மாநிலத்தில் வேளாண்மைப் பட்டதாரிகளிடையே வேலையில்லாப் பிரச்சினை இல்லை. வேளாண்மைக் கல்லூரிகளிலிருந்து பட்டம் பெற்று அவ்வப்போது வரும் வேளாண்மைப் பட்டதாரிகள் வேளாண்மைத் திட்டங்களில், பணியில் அமர்த்தப்படுகிறார்கள்.

திரு. என். மருதாசலம் : இந்த 250 பேர்களில் எவ்வளவு பேர்கள் பட்டம் பெற்றவர்கள் ? எவ்வளவு பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டிருக்கிறது ? அதில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எவ்வளவு பேர்கள் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பட்டம் பெற்றவர்கள் 241, பட்டம் பெறாதவர்கள் 9 பேர்கள். ஆனால் 250 பேர்களுக்கும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு, எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கப் பட்டது என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சொல்கிறேன்.

வாடிப்பட்டியில் பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு விடுதி

*238 வினா.—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், வாடிப்பட்டியில் பின்தங்கிய மாணவர் விடுதி அமைக்கும் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : டி. வாடிப்பட்டியில், பின்தங்கிய மாண வர்களுக்கான உணவு விடுதி 1972-73-ம் ஆண்டில் ஆரம்பிக்கும் யோசனை அரசின் பரிசிலனையில் உள்ளது.

கடல் அலைகளிலிருந்து மின் சக்தி

*239 வினா.—**திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கடல் அலைகளில் இருந்து மின்சாரம் எடுக்க திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

சந்தன 'அத்தர்' உற்பத்தி

*240 வினா.—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு தரப்பில் புதிதாக சந்தன அத்தர் தொழிற்சாலைகளை துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.

செங்குன்றம்—காஞ்சிபுரம் பேருந்துகள்

*241 வின—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

ரெட்ஹில்ஸ் முதல் காஞ்சிபுரம் வரை செல்லும் தனியார் பஸ்ஸை, சுண்ணாம்புக்குளம் முதல் தொடங்க திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : காஞ்சிபுரத்திலிருந்து செங்குன்றம் வரை ஓடிக்கொண்டிருக்கும் தனியார் பேருந்துகளை காஞ்சிபுரம்—சுண்ணாம்புக் குளம்வரை நீட்டிப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசிடம் முடிவு பெறாத நிலையில் இல்லை. எனினும் காஞ்சிபுரத்திலிருந்து எளாவூர் வரை ஓடிக்கொண் டிருக்கும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை பேருந்துகளை சுண்ணாம் புக்குளம் வரை நீட்டிப்பது பரிசிலனையில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : சுண்ணாம்புக்குளத்திலிருந்து எளாவூருக்கு ஏராளமான வியாபாரிகளும் தொழிலாளர்களும் செல்லவேண்டியிருப்பதால் விரைவாக இந்தத் தனியார் பேருந்தையோ அல்லது அந்த 211 அரசுப் போக்குவரத்துப் பேருந்தையோ குறிப்பிட்ட சில வாரங்களுக்குள் நீட்டிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனியார் பேருந்தை சுண்ணாம்புக் குளம் வரையில் நீட்டிப்பதாக இல்லை. 211 நம்பர் வழித்தடத்தைப் பொறுத்த வரையில் சுண்ணாம்புக்குளம் வரையில் நீட்டிப்பதற்கான செயற்குறிப்பு இருக் கிறது. விரைவில் அரசு நடவடிக்கை எடுக்கும்.

"Asthana Vidwans" in temples

* 242 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether there are proposals to appoint "Asthana Vidwans" in major temples in this State?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : மைலாப்பூரிலுள்ள கபாலீஸ்வரர் கோவிலுக்கு உள்ளே இருக்கிற மூலஸ்தானத்திற்கு குளு குளு வசதி செய்யப் போவதாக பத்திரிகையில் படித்தேன். அதுபோன்று பணக்காரக் கடவுள்கள் குடியிருக்கிற கோவில்களிலும் இந்தக் குளு குளு வசதியைச் செய்து பக்தர்கள் உள்ளங்கள் குளிரும்படிச் செய்ய இந்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இக்கேள்வி, ஆலயங்களில் ஆஸ்தான வித்வான்கள் நியமிக்கப்படுவதுபற்றிய கேள்வியாகும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்போது திருப்பதியில் லதா மங்கேஷ்கர் அவர்களை ஆஸ்தான வித்வானாக நியமித்திருக்கிறார்கள். பக்த கோடிகள் அதை மிகவும் பாராட்டியுள்ளார்கள். அதேபோன்று பழனி, மதுரை போன்ற நல்ல வருமானம் உள்ள கோவில்களில் அங்கும் நல்ல ஆஸ்தான வித்வான்களை